## இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு – 2017

இலங்கை சட்ட உதவி ஆணைக்குவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 27 ஆம் இலக்க சட்ட உதவி அதிகாரச் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(அ) முழுமையான தொகுதி நிதிக்கூற்றுக்களின் பூர்த்தியாக்கலில் நியமத்தின் பிரிவு 21 இன் பிரகாரம் தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்கீட்டு நியமம் அனுமதித்தல் அல்லது வேண்டினாலன்றி, நியமத்தின் 53 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளிற்குமாக முன்னைய காலப்பகுதி தொடர்பில் ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்படும். எனினும், 2016 ஆம் ஆண்டுடன் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள் 2017 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

அட்டுறு அடிப்படையில் வருமானம் மற்றும் செலவினத்தை கணக்கிடல் ஆணைக்குழுவின் கொள்கையாகவிருந்தது என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 316,396 தொகையான நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 05 நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 9,002,589 ஆகவிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 6,904,699 இலிருந்து மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 2,097,890 தொகையாக குறைவாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டிடத்திற்கான முற்பணம் | 18,885,170 | முற்பணப் பதிவேடு |
| (ஆ) | முன்னைய வருட சீராக்கல்கள் | 4,995,019 | துணைச் சான்றிதழ்கள் |
| (இ) | 118 நாட்குறிப்புக்களின் தொகை | 12,342,807 | துணைச் சான்றிதழ்கள் |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கிடையில் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிராமணங்களிற்கிடையிலான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கிடையிலான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | நிதிப்பிரமாணம் 138(5), (6) மற்றும் 237 | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட தொகையை உறுதிப்படுத்துவதற்கான கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களுக்கு உரிய சான்றுகள் சேர்க்கப்படாமையால் மீளாய்வாண்டில் ரூபா 1,829,698 கூட்டுத்தொகையான பற்றுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கை | கொடுக்கப்பட்ட வேலை முடிவடைந்ததுடன் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 19 சந்தர்ப்பங்களிலும் ரூபா 753,900 முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு 16 நாட்கள் தொடக்கம் 74 நாட்கள் வரையிலான நேரம் செலவழிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | நிதிப்பிரமாணம் 853(2) | வாடினை அடிப்படையில் எடுக்கப்பட்ட ஹற்றன் பிரதேச நிலையம் கொண்டு நடாத்துகின் வாடகை கட்டிடத்திற்காக அரச மதிப்பீட்டாளரால் மதிப்பீட்டுப் பெறுமதி தீர்மானிக்காமல் மீளாய்வாண்டில் ரூபா 192,000 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.4 போதிய அதிகாரத்தால் ஆதரவழிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவின் 42 ஊழியர்களிற்கான தனியார் காப்புறுதி திட்டம் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிகையின் 9.12 ஏற்பாடுகளில் ஆணைக்குழுவின் அனுமதியில் மாத்திரம் 2015 இல் தொடக்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி பங்களிப்பின் 50 சதவீதமாகவிருந்த ரூபா 1,088,941 மீளாய்வாண்டிற்காக 41 ஊழியர்களிற்காக ஆணைக்குழுவால் தனியார் காப்புறுதி கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதிசார் விளைவுகள் ரூபா 22,153,149 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,242,785 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,910,364 தொகையான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. சம்பளச் செலவினம் ரூபா 20,380,665 ஆல் அதிகரித்தமை.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலும் நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறையொன்றினைக் காணக்கூடியதாக இருந்ததுடன், அது வருடாந்தம் தளம்பலடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் அரசுக்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது, 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஆணைக்குழுவின் பங்களிப்பு சாதகமாகவிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பங்களிப்பு ரூபா 105,836,650 தொகை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 157,751,008 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 16 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், ஏனைய 02 நிகழ்ச்சித் திட்டங்கள் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தாமல் நடாத்தப்பட்டிருந்தது. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள பல்மடுவ, வலபனே, மொறட்டுவ, ஆனமடுவ மற்றும் ஹெற்றிபொல போன்ற 05 நிலையங்களின் நிர்மாணத்திற்காக ரூபா 5,000,000 மதிப்பிடப்பட்டிருந்த போதும், சியவலன்டுவ, பொரளை மற்றும் ஹலகெடற போன்ற ஏனைய 04 நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்கான பௌதீக இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், சட்ட உதவி ஏற்பாட்டிற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 26,088 ஆகவிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிலிருந்த கோரப்பட்ட புதிய நீதிமன்ற வழக்குகள் 12,039 ஆகவிருந்தமையால் மீளாய்வாண்டில் தீர்க்கப்பட வேண்டியிருந்த நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை 38,127 ஆகவிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் 8,344 நீதிமன்ற வழக்குகளை தீர்ப்பதற்கு சட்ட உதவி வழங்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இலும் மேலும், சேவைகள் வழங்கப்பட வேண்டியிருந்த நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை 29,783 ஆக இருந்தமையால் சேவை வழங்கப்பட வேண்டியிருந்த நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை 78 சதவீதமாக இருந்தது.

(ஆ) நிறுவகத்தில் 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலிருந்து பிரேரிக்கப்பட்ட பிரதேச நிலையங்களை இணைப்படுத்துவதன் மூலம் சட்டப்பிரிவிலுள்ள நிர்வாக விடயங்கள் மீதான இலத்திரனியல் அறிக்கையின் தயாரித்தலிற்காக இது ரூபா 500,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த வேலைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆணைக்குழுவால் வலிமட, ரூவன்வெல, கம்பஹா, களுத்துறை மற்றும் மகியங்கனையிலுள்ள 05 பிரதேச நிலையங்களின் நிர்மாணத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 15,000,000 (3,000,000x5) மதிப்பிடப்பட்டிருந்த போதும் நிர்மாணங்கள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், வலிமட நிலையத்தை கொண்டு நடாத்துவதற்காக எடுக்கப்பட்ட வாடகைக்கு விடப்பட்ட கட்டிடத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 100,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 4.2 நிதியாட்களின் குறைப்பயன்பாடு

ரூபா 37,600,823 காசு மீதியானது வினைத்திறனாக பயன்படுத்தாமல் ஆணைக்குழுவின் நடைமுறைக் கணக்கில் மாதாந்தம் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 4.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் குருநாகல், களுத்துறை மற்றும் கடுவெல பிரதேசங்களில் 03 புதிய கிளைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,950,000 ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் எந்தவித நிர்மாணமும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், குருநாகல் கிளை அலுவலகத்தில் நிர்மாண வேலைகளிற்காக 2016 திசெம்பர் 22 இல் ரூபா 3,113,913 முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) காலி கிளை அலுவலகத்தின் திருத்தங்களிற்காக 2016 ஒக்தோபர் 24 இல் ரூபா 435,405 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்த போதும், திருத்தங்களானது 2018 ஏப்ரல் மாதம் வரையிலும் திருத்தங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டில் 08 பிராந்திய அலுவலகங்களிலுள்ள புனரமைப்பு வேலைகளிற்காக ரூபா 7,044,518 ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,023,297 முற்பணமொன்று அதில் 4 அலுவலகர்களிற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 சனவரி 13 இல் சேவைகள் திணைக்களத்தினால் ஆணைக்குழுவின் பதவியணி அங்கீகரிக்கப்பட்ட போதும் ஆட்சேர்ப்புத் திட்டம் 2018 ஏப்ரல் 06 வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், மீளாய்வாண்டின் போது 14 சட்ட உத்தியோகத்தர்கள், 05 முகாமைத்துவ உதவியாளர்கள், 09 அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதியொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள 10 பதவிகளுடன் தொடர்புடைய 50 ஊழியர்கள் 2018 ஏப்ரல் 10 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில்லாத 03 பதவிகளிற்காக 03 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க மற்றும் 2006 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க பதவியணி உத்தியோகத்தர், துணை உத்தியோகத்தர், சிறு தரப்பு பதவிகளின் ஆட்சேர்ப்புக்கள் நிரந்தரமோ / தற்காலிகமோ / அமையவோ / ஒப்பந்தமோ அல்லது வேறெதும் அடிப்படையிலோ நிறுத்தப்பட வேண்டியிருந்ததுடன் இது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியை பெற்றால் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டில் அமைய அடிப்படையில் 31 ஊழியர்களினை ஆணைக்குழு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பியிருந்ததுடன் சம்பளம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பாக முறையே ரூபா 3,276,885 ரூபா 311,320 மற்றும் 77,830 தொகையான தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்**

2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளுடன் இணங்கும் வகையில் ஒவ்வொரு பொது நிறுவனமும் நடாத்தப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டுடன் தொடர்பாக ஆணைக்குழுவானது அவர்களுடைய அதிகார எல்லையின் கீழுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அளவீடுகளை எடுப்பதற்காக கவனத்தை செலுத்தியிருந்தது.

ஆணைக்குழுவானது 2030 ஆம் ஆண்டிற்கான சொல்லப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கவனம் மீது அவர்களுடைய எல்லைகளுக்கிணங்க நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடையப்பட வேண்டியிருக்கவில்லையென ''நிதியினூடான அனைத்திற்குமான இலகு அணுகுமுறை'' ஆக ஆணைக்குழு இனங்கண்டிருந்த போதும் எல்லையின் கீழ் வருகின்ற ஏனைய இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, இலக்குகள் கணித விபரவியல் தரவு மற்றும் அதற்குரிய இலக்குகளை மற்றும் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அடைவதிலுள்ள மைற்கற்கள், போன்றவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 உறுப்புரைக்கமைய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லையென்பதுடன் மீளாய்வாண்டில் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 இன் பீஈடி/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் உறுப்புறைக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 11 செலவின விடயங்களின் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 21 சதவீதத்திலிருந்து 268 சதவீத முற்பணம் அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 725,639 வருமானத்துடன் தொடர்பான 07 செலவின விடயங்கள் மற்றும் ரூபா 4,115,162 வருமானத்துடன் தொடர்பான 07 செலவின விடயங்கள் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 6.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை ஆணைக்குவழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஒப்பந்த கட்டுப்பாடு | உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நிர்மாண ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதற்கு முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதிகூடிய செயலாற்றலை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பதவியணி நிர்வாகம் | சுற்றறிக்கை வழிகாட்டிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கணக்கீடு | | பேரேட்டுக் கணக்குகளிலுள்ள ஆரம்ப மீதிகளை பதிவு செய்வதற்காக பேரேட்டு பதிவுகள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், துணைச்சான்றுகள், பற்றுச்சீட்டுக்களை சர்பார்ப்பதற்காக இணைக்கப்பட்டிருக்காததுடன், பேரேட்டு கணக்குகளின் மீதான பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அடியிதழ்களின் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | முற்பண பதிவேட்டை பராமரித்தல் | - | 2017 ஆம் ஆண்டின் போது 23 சம்பவங்கள் தொடர்பில் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்பட்டிருக்காததுடன் செலவினத் தகவல்களினூடாக முற்பண பதிவேடு மற்றும் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் சேமிப்புக்கள் 10 சம்பவங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | - | 2017 ஆம் ஆண்டில் 06 கட்டிடங்களின் புனரமைத்தல் நடவடிக்கைகளிற்காக கொடுக்கப்பட்ட ரூபா 2,036,297 தொகையொன்று முற்பண பதிவேட்டில் பதிவிடப்பட்டிருக்கவில்லை. |
| | | - | முற்பண பதிவேட்டை பரீட்சிக்கையில் உரிய நடவடிக்கைகளுக்குரிய போதிய பணத்தை மிஞ்சி முற்பணங்கள் கொடுக்கப்பட்ட 10 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டது. |